புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2054 • அக்டோபர் 12, 2023 • புரட்சி 23 • முழக்கம் 39 • விலை ரூ.3.00

# சனாதனத்தின் முகத்திரை கிழிக்கப்பட்டது

## கரூர் - ஈரோடு - கோவை மாவட்டங்களில் பரப்புரை




**கரூர் ;** கரூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 30.09.2023 தொடங்கி 03.10.23 வரை 4 நாட்கள் 16 இடங்களில் தந்தை பெரியாரின் 145 ஆவது பிறந்தநாள் விழா மற்றும் “எது சனாதனம்? எது திராவிடம்?” என்கின்ற தலைப்பில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

கரூர் மாவட்டத்திற்குட்பட்ட குளித்தலை, லாலாபேட்டை, பழைய ஜெயங்கொண்டம், பஞ்சம்பட்டி, கிருஷ்ணராயபுரம், மாயனூர், உப்பிடமங்கலம் புலியூர், காந்திகிராமம், தான்தோன்றி மலை, வெங்கமேடு, கரூர் உழவர் சந்தை அரவக்குறிச்சி, சின்ன தாராபுரம் தென்னிலை, பரமத்தி ஆகிய இடங்களில் தெருமுனை கூட்டங்கள் நடைபெற்றன.

30.09.2023 அன்று காலை குளித்தலை பேருந்து நிலையத்தில் தொடங்கிய பரப்புரை பயணத்தின் முதல் தெருமுனைக் கூட்டத்திற்கு காமராஜர் தலைமை வகித்தார், கரூர் மாவட்ட அமைப்பாளர் வடிவேல் ராமசாமி முன்னிலை வகித்தார்.

முதல் நிகழ்வாக முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன் தொடக்கவுரையாற்றினார், தொடர்ந்து கழகப் பொருளாளர் துரைசாமி, கழகப் பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன், கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் மாணவர் அணி பொறுப்பாளர் சசிகுமார், தலைமைக் குழு உறுப்பினர் பன்னீர்செல்வம், ஆசிரியர் ராமசாமி, தமிழ்நாடு மாணவர் கழகத்தின் திருப்பூர் மகிழவன், பெரியார் உணர்வாளர் சாமியப்பன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

அய்யப்பன்,திருப்பூர் மாநகர அமைப்பாளர் முத்து, திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் ராசு,மாரிமுத்து, மோகன், ரமேஷ், காமராஜ், சதீஷ்குமார், பிரபாகரன், அருண்குமார், கண்ணதாசன், பெரியார் உணர்வாளர் கண்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

மாவட்ட அமைப்பாளர் வடிவேல் ராமசாமி, காமராஜ் ஆகியோர் தெருமுனைக் கூட்டங்களுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**ஈரோடு :** ஈரோடு வடக்கு மாவட்ட கழகம் சார்பில் 01.10.2023 ஞாயிறு அன்று மாலை 05.30 மணியளவில் ஈரோடு மாவட்டம் அத்தாணி பகுதியில் தெருமுனைக் கூட்டம் தொடங்கியது.

சுந்தரம், நடராஜன், செந்தில்குமார், செல்வன், சென்னியப்பன் ஆகியோர் தலைமை தாங்கினர். அறிவுக்கனல் - யாழ்மதியின் பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது.

மாவட்ட அமைப்பாளர் கோபி நிவாசு, நம்பியூர் ரமேசு ஆகியோர் தொடக்கவுரை யாற்றினர். தலைமைக் கழகப் பேச்சாளர் கா.சு. வேலுச்சாமி, கழக வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன் நிறைவுரையாற்றினார்.

மாவட்டச் செயலாளர் செல்வகுமார், கோபி அருளானந்தம், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தோழர் சித்தா பழனிச்சாமி, கோபி ஈஸ்வரமூர்த்தி, அளுக்குளி கிருஷ்ணமூர்த்தி, சின்னதம்பி காசிபாளையம், நம்பியூர் ரமேஷ் நம்பியூர் ஒன்றியச் செயலாளர், வினோத் பவானி ஒன்றியச் செயலாளர், சுந்தரம், ஆசிரியர் நடராஜன், செந்தில்குமார், செல்வன், சென்னியப்பன், கோபி ரகுநாதன், அறிவுக்கனல், கலைச்செல்வன், ராஜன் பாபு, குட்டி, ரஞ்சித், நஞ்சகவுண்டன்பாளையம் புலவன் சிறை நடராஜன், மயில்சாமி, அறிவு கனல், அறிவரசன், யாழ்மதி, நம்பியூர் கதிர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கோவை :** நவீன தமிழ்நாட்டின் சிற்பி, திராவிட இயக்கத்தின் பெருமைமிகு அடையாளமான கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு கோவை மாநகரக் கழகம் சார்பில் தெருமுனைக் கூட்டங்கள் தொடங்கியது.

06.10.2023 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு குனியமுத்தூரில் முதல் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு கோவை மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம் தலைமை வகித்தார், பொங்கலூர் கார்த்திக், பொன்மணி முன்னிலை வகித்தனர்.

மாவட்ட அமைப்பாளர் புரட்சித்தமிழனின் பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது, தொடர்ந்து நிர்மல்குமார் - வெங்கடேசன் குழுவின் கேள்வி - பதில் உரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

கூட்டத்தை கோவை மாநகராட்சித் துணை மேயர் வெற்றிச்செல்வன் தொடங்கி வைத்து வாழ்த்துரையாற்றினார். பின்னர் கோவை மாநகராட்சி ஆளுங்கட்சித் தலைவர் கார்த்திகேயன், கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் குனியமுத்தூர் பகுதிக் கழகச் செயலாளர் லோகநாதன், 84வது வட்டச் செயலாளர் முகமது யாகூப், மாமன்ற உறுப்பினர்கள் பாபு, செந்தில்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அதைத் தொடர்ந்து உக்கடத்தில் மாநகரச் செயலாளர் வெங்கடேசன் தலைமையிலும், நீலிகோணம்பாளையத்தில் புரட்சித்தமிழன் தலைமையிலும், பீளமேடு ரொட்டிக்கடை மைதானத்தில் மாவட்டத் தலைவர் மேட்டுப்பாளையம் பா.இராமசந்திரன் தலைமையிலும் தெருமுனைக் கூட்டங்கள் இரண்டு நாட்கள் நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்துகொண்ட கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, திருப்பூர் மகிழவன் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.

கூட்டத்தில் உக்கடம் பகுதிச் செயலாளர் பக்ருதீன், 80 வார்டு செயலாளர் தங்கவேல், மாநகர சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் சுலைமான், கழகத் தோழர்கள் மாதவன், இராமகிருஷ்ணன், இராஜாமணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# சனாதன தர்மம் - வர்ணாஸ்ரமத்தின் மறு பெயர்

• அது என்ன ‘சனாதனம்’? வர்ணாஸ்ரம தர்மத்தின் மற்றொரு பெயர் தான் அது! மனு சாஸ்திரம், இறந்து போன மூத்த சங்கராச்சாரி, இந்துக்களின் புனித நூல்கள் எல்லாம் இதைத் தான் கூறுகின்றன.

• பிறப்பால் ஒருவன் ‘பிராமணன்’ - அவனுக்கு அடிமை, பெரும்பான்மை உழைக்கும் மக்களான சூத்திரர்கள், பஞ்சமர்கள் மற்றும் பெண்கள். இது பிரம்மாவே கூறியது என்று மனுதர்மம் கூறுகிறது.

• அந்த சனாதனம், இப்போது பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி என்று அதிகார பலத்துடன் தமிழர்களாகிய நம்மீது படை எடுத்து வருகிறது.

• மொழி, இன அடையாளங்களை ஒழிக்க, மாநிலங்களையே இல்லாது ஆக்க நடக்கும் முயற்சி - சனாதனம்.

• நீட் தேர்வைத் திணிப்பது - சனாதனம்.

• இந்தி, சமஸ்கிருதத்தை திணிப்பது - சனாதனம்

• காசியை தலைநகராக்கி, மனுதர்மத்தை அரசியல் சட்டமாக்கி இஸ்லாமிய, கிறிஸ்துவ மக்களின் வாக்குரிமையைப் பறிப்போம் என்று சாமியார்கள் கூட்டம் வாரணாசியில் கூடி இந்துராஷ்டிரத்துக்கு புதிய அரசியல் சட்டத்தை அறிவித்திருக்கிறதே - அது சனாதனம்.

• தமிழ்நாட்டிடமிருந்து ஒரு ரூபாயை வாங்கி 35 காசுகளை மட்டுமே திருப்பித் தருகிறதே ஒன்றிய ஆட்சி - அது சனாதனம்.

• அனைத்து இந்துக்களும் சமம் ஆக முடியாது; ‘பிராமணர்’ கட்டுப்பாட்டிலுள்ள கோயிலில் பிற ஜாதி இந்துக்கள் அர்ச்சகராக முடியாது என்று நீதிமன்றத்தில் இப்போதும் படி ஏறுகிறார்களே - அது சனாதனம்.

• கார்ப்பரேட்டுகளுக்கு 13 இலட்சம் கோடி வரிச் சலுகை; அதே நேரத்தில் விளிம்பு நிலை எளிய இந்துக்களுக்கு பெட்ரோல், டீசல், கேஸ் விலையை ஏற்றிக் கொண்டிருக்கிறார்களே - அது சனாதனம்.

• ஸ்வயம் சேவக்குகளாக ஆர்.எஸ்.எஸ் - இல் பெண்கள் உறுப்பினர் ஆக முடியாது என்று இன்று வரை தடை போட்டிருக்கிறார்களே - அது சனாதனம்.

• சரிபாதியாக இருக்கும் இந்துப் பெண்கள் தெய்வ பக்தி இருந்தாலும் கோயில் அர்ச்சகராக, சடங்குகளில் பங்கேற்க, முடியாதவர்களாக தடைபோட்டு வைத்திருக்கிறார்களே - அது சனாதனம்.

• மாட்டுக் கறி சாப்பிடாதே; மதம் மாறினால் சிறை; இஸ்லாமியருக்கு குடியுரிமை மறுப்பு; நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் மறுப்பு - இவை எல்லாமுமே சனாதனம்.

• தேர்ந்தெடுக்கப்படும் ஆட்சியைக் கவிழ்த்து, குதிரை பேரம் பேசித் தங்களது ஆட்சியாக மாற்றுவது, ஆளுநர்களை அரசியல் முறைகேடுகளுக்குப் பயன்படுத்துவது - சனாதனம்.

• ஜாதி கட்டாயம் வேண்டும் என்பதோடு, ஜாதி ஒழிப்பு பற்றி கள்ள மவுனம் சாதிப்பது - சனாதனம்.

• ஜாதியமைப்பை ஆதரித்துக் கொண்டு - ஜாதிவாரி கணக்கெடுப்புகளை மறுப்பது - சனாதனம்

• மாநில உரிமைகளை மறுத்து ஒற்றை ஆட்சியைத் திணிப்பது - சனாதனம்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## தலையங்கம்

# பூணூல் சடங்கு நடத்தும் ஆளுநர்

பார்ப்பனியம் சனாதன தர்மம் என்ற போர்வைக்குள் பதுங்கிக் கொண்டு சமூகத்தை வேதகாலத்துக்கு பின்னோக்கி இழுத்துச் செல்லத்துடிக்கிறது. தன்னை ஒரு சனாதனவாதி என்று கூறிக்கொள்ளும் தமிழக ஆளுநர் ரவி, நந்தன் (தீயில் எரிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட தோழர்) பிறந்த கிராமத்தில் பட்டியலினப் பிரிவினருக்கு பூணூல் அணிவிக்கும் நிகழ்ச்சியை நடத்தியுள்ளார்.

ஒரு பிராமணன் காயத்ரி மந்திரம் ஓதி பூணூல் அணிவிக்கப்பட்டு பிராமணன் என்று அடையாளப்படுத்தப்பட்ட உடனேயே அவன் பிறப்பில் சத்திரிய, வைசிய, சூத்திரர்களின் எஜமானர்கள் ஆகிவிடுகிறான்,

“பிராமணன் முதல் வர்ணத்துக்கு உரியவன், பிரம்மாவின் முகமாகிய உயர்ந்த இடத்தில் பிறந்தவன், அதனால் இந்த உலகில் உண்டாகியுள்ள சகல வர்ணத்தாரின் பொருள்களையும் தானம் வாங்க அவனே பிரபுவாகிறான்” என்று மனுசாஸ்திரம் கூறுகிறது.

சத்திரிய, வைசிய வர்ணத்தில் அடங்கியுள்ள ஜாதிகளும் பூணூலை அணிகிறார்களே என்ற கேள்விக்கு மேற்குறிப்பிட்ட மனுசாஸ்திரமே சரியான பதிலாகிறது. கடவுளே பிரம்மனுக்கு கட்டுப்பட்டவன் என்று வேதம் கூறுகிறது.

‘‘தெய்வா தீனம் ஜகத் சர்வம்
மந்த்ரா தீனம் து தெய்வதம்
தன்மந்திரம் பிராமணாதீனம்
தஸ்மத் பிராமணா பிரபு ஜெயத்’’

“உலகம் கடவுளுக்கு கட்டுப்பட்டது, கடவுள் மந்திரத்துக்கு கட்டுப்பட்டவர்கள், மந்திரங்கள் பிராமணர்களுக்கு கட்டுப்பட்டது, பிராமணர்களே நமது கடவுள் என்பதே இதற்கான விளக்கம் ” பிராமணர்கள் ஓதும் மந்திரங்கள் வழியாகவே சிற்பி செதுக்கிய சிலைகள் கடவுளாக்கப்படுகின்றன, பிராமணர்கள் மந்திரத்தால் தான் திருமணங்கள் உறுதிபடுத்தப் படுகின்றன,

கடந்த வாரம் அலகாபாத் உயர்நிதீமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது. வேத பண்டிதர்களைக் கொண்டு விவாகத்துக்கு உரிய அத்தனை சடங்குகளையும் உரிய முறைப்படி செய்கின்ற திருமணமே செல்லத்தக்கது என்றும் ‘சப்தபதி’ எனும் அக்னி வலம் வருவதின் எண்ணிக்கையில் மணமக்கள் ஒன்றை குறைத்துவிட்டால் கூட திருமணம் செல்லாது என்று தீர்ப்பு வழங்கியுள்ளது. இறந்து போனவர்கள் ஆன்மா சாந்தி அடையவும், அவர்களுக்கு விருப்பமான உணவுகளை அனுப்பி வைக்கவும் வேத மந்திரங்களுக்கு மட்டுமே சக்தி அதிகம், அதுவும் பூணூல் அணிந்த புரோகிதர்கள் மட்டுமே, அதற்கான உரிமை பெற்றவர்கள் என்கிறார்கள். அதுவும் காசியில் கங்கை நதிக்கரையில் பிணங்களை எரிந்தால் மோட்சம் உறுதி என்ற நம்பிக்கையை விதைத்துள்ளனர். ஆனால், பிண எரிப்பை ‘பஞ்சமர்கள் என்ற பட்டியல் பிரிவினரே பரம்பரைத் தொழிலாக செய்து வருகின்றனர். கங்கை ஆற்றங்கரையில் பிணம் எரிப்புக்காகவே ஒரு சாதிப் பிரிவு இருக்கிறது. ’டோம்ஸ்’ என்பது அவர்களது பெயர், அவர்கள் எரித்த பிணம் மட்டுமே மோட்சத்துக்கு போய்சேரும் என்ற மூடநம்பிக்கையை பார்ப்பனர்கள் – பாமர மக்களின் மூளையில் திணித்து விட்டார்கள். அப்போது தானே அவர்கள் அத்தொழிலை காலம்தோறும் செய்ய முடியும். ஆனால் அவர்கள் வாழ்நிலை படுமோசமாக உள்ளது. இதுக்குறித்து ராதிகா (அய்யங்கார்) என்ற பெண் ‘கங்கையில் நெருப்பு’ Fire On The Ganges) என்ற விரிவான நூலை அண்மையில் எழுதியுள்ளார்.

ராமானுஜர் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு பூணூல் அணிவித்தார், பாரதியும் அதையே செய்தான், என்ன நடந்துவிட்டது? ராமானுஜரை வைணவ பார்ப்பனர்கள் மதிப்பதே இல்லை, மனுசாஸ்திரத்தையே போற்றுகிறார்கள். கலைஞர் தான் தொலைக்காட்சியில் ஒரு தொடரே ராமானுஜர் குறித்து எழுதினார். பெரியார் ஒரு கேள்வியைக் கேட்டார், மூன்று சதவீத பார்ப்பனர்கள் பூணூல் அணிவதை ஏதிர்க்காமல் 97 சதவீத மக்களுக்கும் பூணூல் போட வேண்டும் என்பது என்ன நியாயம் என்று கேட்டு – ஒரு உதாரணத்தையும் கூறினார். மூட்டை அரிசியில் ‘கல்’ இருந்தால் கல்லை பொறுக்கி எடுக்க வேண்டுமே தவிர அரிசியைத் தனியாக பொறுக்கிக் கொண்டிருப்பதா? என்று கேட்டார்.

பூணூல் அணியும் ‘பிராமணன்’ பிராமணனுக்கு உரிய வாழ்வைத்தான் வாழ்கிறானா? கடல் தாண்டி போவது பிராமண தர்மப்படி குற்றம், ஆனால் கடல் தாண்டி போய் பிராமண சங்கம் நடத்துகிறார்கள். எண்ணெய் தொடர்பான வணிகம் நடத்துவது ஒரு குற்றம். ஆனால் ஓட்டல் நடத்துகிறார்கள், ஐஏஎஸ், ஐபிஎஸ், மருத்துவம், திரைப்படத்துறை, தோல் தொழில்நுட்பத் துறை என்றெல்லாம் படிப்பது ‘பிராமணனுக்கு விதிக்கப்பட்ட கடமையை மீறுவது ஆகாதா?

**பூணூல் பற்றி ராமகிருஷ்ணர் இவ்வாறு கூறுகிறார் :**

பூணூல் அணிவது பற்றி பரமஹம்சர் என்று மதவாதிகளால் போற்றப்படும் ராமகிருஷ்ணர் கூறிய கருத்து “The Sacred thread is also bondage for it is a sign of Egoism, I am Brahmin and superior to all” (‘Sri Ramakrishna the Great Master’ நூலில் 137வது பக்கம்)

“பூணூல் என்பது அகங்காரச் சின்னம்; நான் எல்லோரையும் விட உயர்ந்த பிராமணன் என்பதன் சின்னம்” என்கிறார்.

**பூணூல் அணிவதை காந்தியும் எதிர்த்துள்ளார்; அவர் தனது சுயசரிதையில் எழுதுகிறார்**


“நான் பெரியவன் ஆகிவிட்ட பிறகு, இந்தியாவிலும் தென்னாப்பிரிக்காவிலும், பலர் நல்ல எண்ணத்தின் பேரிலேயே நான் பூணூல் போட்டுக்கொள்ளும் படி செய்ய முயன்றார்கள். ஆனால் அவர்கள் முயற்சி வெற்றியடையவில்லை. சூத்திரர்கள் பூணூல் போட்டுக்கொள்ளக் கூடாது என்றால், மற்ற வருணத்தினருக்கு மாத்திரம் அதைப் போட்டுக்கொள்ளுவதற்கு என்ன உரிமை இருக்கிறது என்று விவாதித்தேன். பூணூல் அணிவது அனாவசியமான பழக்கம் என்பது என் கருத்து, ஆகையால் அதை அணிய வேண்டும் என்பதற்குப் போதுமான நியாயம் இருப்பதாக எனக்கு தோன்றவில்லை. பூநூலைப் பொருத்தவரையில் எனக்கு எந்தவித ஆட்சேபமும் இல்லை. ஆனால், அதை அணிய வேண்டும் என்பதற்குரிய நியாயம்தான் எனக்குத் தென்படவில்லை” என்கிறார் காந்தி.

ஆளுநர் பூணூல் புனிதத்தை பேசுகிறார், இது ஆளுநரின் வேலைதானா? 1948ஆம் ஆண்டு பெரியார் கூறிய கருத்து இப்போதும் பொருந்தி வருகிறது.

பார்ப்பனர் – திராவிடர் போராட்டம் ரொம்பவும் வளர்ந்து விட்டது; பார்ப்பனர்களும் துணிந்துவிட்டார்கள்; துணியக் காரணம் இல்லாமல் இல்லை. இன்று ஆட்சி அவர்கள் ஆதிக்கத்தில் இருக்கிறது. அனேகமாக அவர்கள் ஆதிக்கத்திற்கு இதுவே கடைசி காலமாக இருக்கக் கூடும். இன்று தவறின், நாளை ஆட்சி யார் கைக்கு செல்லுமோ என்று அஞ்சுகிறார்கள். ஆகவே ஆட்சி தம் ஆதிக்கத்தில் உள்ள போதே நம்மீது பாய்ந்து தம் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள நினைக்கிறார்கள்.

பெரியார், விடுதலை – 19.05.1948

## இட ஒதிக்கீடு : வரலாற்று ஆவணமாக வெளிவந்துள்ள நூல்




***நிகர்மொழி பதிப்பகம் “உயர்ஜாதி ஏழைகளுக்கு 10% EWS இட ஒதுக்கீடு சரியா? தவறா? என்ற நூலை வெளியிட்டிருக்கிறது.***

**தொகுப்பாசிரியர் : சு.விஜயபாஸ்கர்**

*தமிழக முதல்வர் முன்னுரை எழுதியுள்ளார். 104 சமூகநீதி ஆய்வாளர்களின் கட்டுரை இடம்பெற்றுள்ளது, இட ஒதுக்கீடு பற்றிய ஒரு வரலாற்று ஆவணமாக வெளிவந்துள்ள இந்நூல் ஒவ்வொரு சமூக நீதி போராளிகளுக்குமான அறிவாயுதம் என்றுதான் கூற வேண்டும். 608 பக்கங்களை கொண்ட இந்த நூலுக்கு மிகக்குறைவாக ரூ.600/- மட்டுமே விலை நிர்ணியித்துள்ளனர்.*

***நூலைப்பெற விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண் : 8428455455***

# கலைஞர் நூற்றாண்டு விழா

## கழகப் பொதுச்செயலாளர் பங்கேற்பு



**அக் 07 : கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டம் – வில்லிவாக்கம் மேற்குப் பகுதி திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் வில்லிவாக்கம் பேருந்து நிலையம் அருகில் இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்ற ‘‘திருவாரூரின் அறிவுத் தேர்! திசைகளெங்கும் அவரின் பேர்!’’ பொதுக்கூட்டத்தில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் கலந்து கொண்டு உரையாற்றினார்.**

**இந்த கூட்டத்தில் திமுக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாநில செயற்குழு உறுப்பினர் கனகராஜ் ஆகியோரும் பங்கேற்று உரையாற்றினர்.**

முதல் பக்க தொடர்ச்சி

- *‘பிராமணன்’ என்றால் ஒழுக்கமானவன்; குஜராத்தில் கூட்டுப் பாலியல் செய்தாலும் 14 பேரைக் கொலை செய்தாலும், “பிராமணன் ஒழுக்கமானவன்” – முன்கூட்டியே சிறையிலிந்து விடுதலை செய்வோம் என்கிறார்களே – அது சனாதனம்.*
- *மணிப்பூர் பழங்குடி மக்களை ஒழிக்கத் துடிப்பது – சனாதனம்*
- *பணமதிப்பு இழப்பு – ஜி.எஸ்.டி. வரி விதிப்பு – காஷ்மீர் தனி உரிமை அழிப்பு – விவசாயிகளுக்குத் துரோகம்; மின்சார உரிமையை மாநிலங்களிலிருந்து பறித்தல்; – அமுலாக்கத் துறை – சி.பி.அய். அமைப்புகளைப் பழி வாங்கப் பயன்படுத்துதல் – ‘சனாதனம்’.*
- *வன்முறையாளர்களை, கிரிமினல் குற்றவாளிகளை கட்சி உறுப்பினர்களாக்கி ‘இந்துத்துவா’ படம் காட்டும் மோசடி வித்தை – சனாதனம்.*
- *ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்தும் வர்ணாஸ்ரமமே – சனாதனம்.*

# பெரியார் - அம்பேத்கர் உறவை பாராட்டிய இளையபெருமாள்

அம்பேத்கர் பிறந்தநாளைக் கொண்டாடியதற்காக பெரியார் தொண்டு வீராசாமியை கட்சியை விட்டு நீக்கினார் என்ற இளையபெருமாள் குற்றம்சாட்டுவது அபத்தமானது என்று 'எஸ்.வி.ஆர்' எழுதினார். அதற்காக எஸ்.வி.ஆர் மீது கடும் தாக்குதலை தொடுக்கிறார் ஸ்டாலின் இராஜாங்கம்.

அந்த குற்றச்சாட்டுக்கு ஆதாரம் தேவையில்லை என்கிறார் 'அறிவுஜீவி' ஸ்டாலின் இராஜாங்கம், ஆனால் தொண்டு வீராசாமி தனிப்பட்ட வெறுப்பால் விலகினார் என்ற எஸ்.வி.ஆர் குற்றச்சாட்டுக்கு மட்டும் ஆதாரம் கேட்கிறார்.

அம்பேத்கரைப் பாராட்டி பெரியார் பல நிகழ்ச்சிகளில் பேசினார். இளையபெருமாள் அவர்களே பெரியாருடன் மேடைகளை பகிர்ந்து கொண்டு - அம்பேத்கர் மீது பெரியார் கொண்டிருந்த மதிப்பை விளக்கியிருக்கிறார்.

சென்னை பெரிய மேட்டில் கொண்டாடப்பட்ட டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 75 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா பற்றிய ஒரு செய்தியை எடுத்துக்காட்டுவது பொருத்தமாக இருக்கும். இந்த செய்தி 14.4.1966ஆம் நாளிட்ட 'விடுதலை'யின் முதல் பக்கத் தலைப்பு செய்தியாகவும் உரை இரண்டாம், மூன்றாம் பக்கங்களிலும் வந்துள்ளதாகும்.

**பற்றற்ற பகுத்தறிவாளரே சமூகக் குறைகளை நீக்க இயலும்!**
**மனித குலத்தை திருத்திய நான்கு தியாகச் சீலர்களில் டாக்டர் அம்பேத்கர் ஒருவர்!**
**அறிவு தெளிவுக்கு புத்த மார்க்கமே சிறந்தது!**
**தாழ்த்தப்பட்டவர்களின் இரட்சகர் அவரே!**

**சென்னை அம்பேத்கர் விழாவில் பெரியார் பேருரை**

சென்னை: ஏப்ரல் 14 : "டாக்டர் அம்பேத்கர் உலகினரின் சொத்தானவர்; செயற்கரிய செய்த மனித குலத்தை திருத்திய தியாக சீடர்கள் நால்வரில் ஒருவர்; அறிவு தெளிவுக்கு புத்த மார்க்கமே சிறந்ததென கண்டு தானும் புத்தர் ஆனார்; லட்சக்கணக்கில் புத்தர்களை உண்டாக்கினார்; தாழ்த்தப்பட்ட மக்களின் இரட்சகர் ஆவார்; அம்பேத்கர் வகுப்புரிமை வாங்கித் தந்தவர்; மடமையை ஒழித்து அறிவுத் தெளிவடையச் செய்தவர்; லட்சக்கணக்கில் புத்த மார்க்கத்தில் சேர்ந்த மக்கள் வழிகாட்டி ஆவார்" என்று தந்தை பெரியார் அவர்கள்

## கொளத்தூர் மணி

பெரிய மேட்டில் நடந்த டாக்டர் அம்பேத்கர் 75 ஆம் ஆண்டு விழாவில் விளக்கவுரை ஆற்றினார்கள்.



சென்னை பெரிய மேட்டில் 13.4.66 அன்று மாலை 6:30 மணி அளவில் டாக்டர் அம்பேத்கர் நினைவு ட்ரஸ்ட் சார்பாக தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப்பெரும் தலைவரும் உலகம் போற்றும் ஒப்பற்ற பேரறிஞருமான காலஞ்சென்ற டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 75 ஆம் ஆண்டு விழாவானது மிக்க சீரும் சிறப்புடனும் நடைபெற்றது.

வரவேற்புரை:ஆரிய சங்காரன்

விழாக் குழு செயலாளர் திரு ஆரியசங்காரன் அவர்கள் வரவேற்பு உரை நிகழ்த்தினார். விழாவிற்கு பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர் திரு இளைய பெருமாள் அவர்கள் தலைமை வகித்தார்.

திரு இளையபெருமாள் எம்.பி தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:

"டாக்டர் அம்பேத்கர் அவர்களைப் பற்றி நாம் பேசுவதை விட தலைவர் பெரியார் அவர்கள் பேசுவது தான் சாலச் சிறந்ததாகும்.

அம்பேத்கர் விழாவினை ஒரு குறிப்பிட்ட சமுதாயம் மட்டும் தான் கொண்டாட வேண்டும் என்ற கேடுகெட்ட நிலை இந்த நாட்டில் ஏற்பட்டு உள்ளது, அம்பேத்கர் அவர்கள் ஒரு தனிப்பட்ட சமுதாயத்திற்கு மட்டும் சொந்தமானவர் அல்ல; இந்த தேசத்தின் பொது சொத்து ஆவார். நான் கூறவில்லை காந்தியாரே கூறியிருக்கின்றார். நேரு அவர்களும் கூறி இருக்கின்றார்கள்.

டாக்டர் அம்பேத்கர் அவர்கள் நினைவுச் சின்னமாக அவர் உருவம் பொறித்த தபால் தலைகள் வெளியிட முன்வந்த சர்க்காரை நாம் பாராட்ட வேண்டும்.

பெரியார் அவர்கள் டாக்டர் அம்பேத்கர் அவர்களுடன் நீண்ட நாள் தொடர்பு கொண்டவர் ஆவார். அவர்கள் வாயினால் நாம் அம்பேத்கர் அவர்களின் சிறப்புகளை அறிய வேண்டும்.

அம்பேத்கர் நினைவு டிரஸ்ட் என்பது எந்த ஒரு அரசியல் கட்சியையும் சார்ந்தது அல்ல. தேர்தலுக்காக எந்த கட்சிக்கும் பணம் சேர்த்து கொடுக்க இருக்கின்றதும் அல்ல. அப்படிப்பட்ட எண்ணம் உடையவர்கள் யாராவது ட்ரஸ்டில் இருந்தால் தயவு செய்து அவர்கள் விலகி விடுவது நல்லது என்று கூறிக் கொள்ளுகின்றேன்.

அம்பேத்கர் டிரஸ்ட் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளைக் கொண்டாடுவது, அவரது நூல்களைப் பரப்புவது, அவரது தீவிர கருத்துக்களை புத்தகங்களாக வெளியிட்டு மக்களிடையே பரப்புவதும் ஆகும்" என்று எடுத்துரைத்தார்.

அடுத்து வழக்கறிஞர் பஞ்சாட்சர மூர்த்தி உரையாற்றியதைத் தொடர்ந்து பெரியார் நீண்டதொரு உரையினை ஆற்றியுள்ளார்.

அறிவர் அம்பேத்கரின் பிறந்த நாள் விழாக்களைக் கொண்டாடுவது, கொண்டாடச் செய்வது, அவரது நூல்களைப் பரப்புவது, அவரது தீவிரக் கருத்துகளை டிரஸ்ட்டே வெளியிட்டுப் பரப்புவது போன்ற நோக்கங்களைக் கொண்ட தேர்தல் அரசியலில் இல்லாமல் கட்சி சார்பற்று அம்பேத்கரியத்தைப் பரப்புவதையே நோக்கமாகக் கொண்டு இயங்கிற ஓர் அமைப்பு நடத்திய டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் விழா அது.

1966ஆம் ஆண்டில் நடந்த அவ்விழாவில், "டாக்டர் அம்பேத்கர் அவர்களைப் பற்றி நாம் பேசுவதை விட தலைவர் பெரியார் அவர்கள் பேசுவது தான் சாலச் சிறந்ததாகும், என்றும், "பெரியார் அவர்கள் டாக்டர் அம்பேத்கர் அவர்களுடன் நீண்ட நாள் தொடர்பு கொண்டவர் ஆவார். அவர்கள் வாயினால் நாம் அம்பேத்கர் அவர்களின் சிறப்புகளை அறிய வேண்டும்" என பேசிய இளைய பெருமாள் அவர்கள், அம்பேத்கர் பிறந்த நாள் கொண்டாடியதற்காக 'தொண்டு' வீராசாமி அவர்களைக் கழகத்திலிருந்து பெரியார் நீக்கினார் என்று பழி சுமத்தியதை விளக்க தோழர் எஸ்.வி.ஆர் அவர்கள் பயன்படுத்திய சொற்களைப் பிழையானதாகப் பார்க்க முடியவில்லை.

தொடரும்

# வனவாசி கல்லூரியில் விநாயகர் சிலை அகற்றம் - கழக கோரிக்கை வெற்றி





**அக்டோபர் 03 :** *வனவாசி அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்திற்குள் சட்ட விரோதமாக வைக்கப்பட்ட பிள்ளையார் சிலையை அகற்றக்கோரி கல்லூரி முதல்வரிடம் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கடந்த 03.10.2023 அன்று புகார் மனு அளிக்கப்பட்டது.*

*சிலையை அகற்றிக்கொள்வதென கல்லூரி நிர்வாகம் உறுதி அளித்திருந்த நிலையில், மறுநாளே (04.10.2023) இந்து முன்னணியை சார்ந்த நிர்வாகிகள் கல்லூரிக்குள் நுழைந்து சிலையை அகற்றக்கூடாது என கல்லூரி நிர்வாகத்திடம் மனு கொடுத்து விட்டு, அங்கிருந்த பிள்ளையார் சிலையை வழிபட்டு சென்றனர்.*

*இதனையறிந்து மீண்டும் கல்லூரி முதல்வரை தோழர்கள் தொடர்புகொண்டு சிலையை உடனடியாக அகற்ற வேண்டும் என கேட்டுக்கொண்ட நிலையில், 06.10.2023 அன்று கல்லூரி வளாகத்திற்குள் வைக்கப்பட்ட பிள்ளையார் சிலையை கல்லூரி நிர்வாகத்தினர் அகற்றினர்.*

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# மோடியின் குற்றச்சாட்டுக்கு மறுப்பு

# கோயில்களைக் கைப்பற்றியது யார்?

*சமீபத்தில் தெலுங்கானாவில் பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, தமிழகத்தில் கோவில்கள் அரசால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதாக மிகவும் வருத்தப்பட்டு பேசியிருக்கிறார். தமிழ்நாட்டில் நீண்ட நாட்களாகவே சங்பரிவாரக் கூட்டம் கோவில்களை அரசு தன் கட்டுப் பாட்டில் வைத்துக் கொண்டு பக்தர்கள் தரும் காணிக்கையை இதர பணிகளுக்கு திருப்பி விடுவதாக கொஞ்சமும் நேர்மையின்றி ஒரு பிரச்சாரத்தை செய்து கொண்டே இருக்கிறது. கோவில் பணத்தை எடுத்து மசூதிகள் கட்டுவதாக, தொலைக்காட்சி விவா தங்களில் வலதுசாரிகள் என்ற பெயரிலும், விமர்சகர் என்ற பெயரிலும் பங்கேற்போர், கதை அளந்து கொண்டிருக்கிறார்கள். இது தவிர, கோவில் சொத்துக்களை பலர் அபகரித்து வைத்திருப்பதாகவும் அரசு அதற்கு துணை போவதாகவும் பேசித் திரிகிறார்கள். இந்த பிரச்சாரங்கள் எந்த அளவிற்கு உண்மை என்பதை ஒவ்வொன்றாக பார்க்கலாம்:*

### தமிழகத்தில் மட்டும்தான் கோவில்கள் அரசு கட்டுப்பாட்டில் உள்ளனவா?

மோடி அப்படித்தான் பேசியிருக்கிறார். ஆனால், இந்தியாவில் பல மாநிலங்களிலும் அரசுக் கட்டுப் பாட்டில்தான் கோவில்கள் உள்ளன. கேரளம், கர்நாடகம், ஆந்திரா, தெலுங்கானா, பீகார், ஒடிசா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் கோவில்களை நிர்வகிப்பதற்காக தனியாக சட்டம் இயற்றப்பட்டு அமலில் இருந்து வருகிறது. இந்த மாநிலங்களில் எல்லாம் கோவில்கள் அரசின் கட்டுப்பாட்டில்தான் உள்ளன. இதில் புதுச்சேரியில் தற்போது பாஜக கூட்டணி ஆட்சி தான் நடைபெற்றுக் கொண்டிருக்கி றது. கர்நாடகத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளும் அதற்கு முன்பு சில முறையும் பாஜக தான் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தது. ஆனால், அப்போதெல்லாம் இந்த சட்டங்களை திருத்தி கோவில்களை அரசுக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்து விடவில்லை. மகாராஷ்டிரா, உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட சில மாநிலங்களில் இந்து சமய நிறுவனங்கள் மற்றும் கோவில்களின் நிர்வா கத்தை கண்காணித்திட பப்ளிக் டிரஸ்ட் ஆக்ட் (பொது அறக்கட்டளைச் சட்டம்) ஏற்படுத்தப்பட்டு நடைமுறை யில் இருந்து வருகிறது. இதில் மகாராஷ்டிராவிலும், மத்தியப்பிரதேசத்திலும், உத்தரப்பிரதேசத்திலும் தற்போதும் பாஜக தான் ஆட்சி பொறுப்பில் இருக்கிறது. ராஜஸ்தானில் பல ஆண்டுகள் பாஜக ஆட்சி பொறுப்பில் இருந்தது. அந்த மாநிலங்களில் கோவில்களை அரசு கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று ஒருபோதும் சங் பரிவார் குரல் எழுப்பியதே கிடையாது. குஜராத் மாநிலத்தில் உள்ள சோமநாதர் ஆலயத்தில் அறங்காவலர் குழு தலைவராக நரேந்திர மோடி, அறங்காவலர்களாக எல்.கே.அத்வானி, அமித்ஷா ஆகியோர் இப்போதும் இருந்து வருகிறார்கள். அங்கெல்லாம் கோவில்களை அரசின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிப்பது என்று அவர்கள் ஒருபோதும் பேசவில்லை.

### கோவில் பணம் வேறு காரியங்களுக்கு திருப்பி விடப்படுகிறதா?

அப்பட்டமான கோயபல்ஸ் பிரச்சாரம் இது. கோவில் வருமானத்தில் எந்தவொரு பணத்தையும் அரசு வேறொரு காரியத்திற்கு பயன்படுத்துவது இல்லை. பயன்படுத்த முடியாது என்பதுதான் சட்டம். பணியாளர் சம்பளத்திற்காக அதிகபட்சம் மொத்த வருவாயில் 16 சதவிகிதத்தை எடுத்துக் கொள்ளலாம். மற்றபடி உண்டியல், நன்கொடை, காணிக்கை, கட்டணம், இதர வருவாய் அனைத்தும் ‘அக்கவுண்ட் ஏ’ எனும் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. மாதந்தோறும் கோவில் பணிகளுக்கு தேவையான செலவுகளுக்காக இன்ன வகைக்கு இவ்வளவு என்று மொத்த செலவுகளுக்காக நிர்வாக அதிகாரியால் கோரப்படும் தொகை இந்த ஏ கணக்கிலிருந்து பி கணக்கிற்கு மாற்றப்படும். ஒவ்வொரு மாதமும் இந்த வகையில் தான் செலவுகளுக்காக அந்த பணம் எடுக்கப்படுகிறது. எனவே, கோவில் பணத்தை மடைமாற்றுவதாக சொல்வது அப்பட்டமான பொய். அதிலும் குறிப்பாக, அந்த பணத்தை எடுத்து மசூதிகளுக்கும், கிறித்துவ தேவாலயங்களுக்கும் வழங்குவதாக சொல்வது கடைந்தெடுத்த அயோக்கியத் தனம். அப்படி ஒரு உதாரணத்தைக் கூட அவர்களால் காட்ட முடியாது.

### மக்களின் வரிப்பணம் கோவில்களுக்கு செலவிடப்படுகிறதா?

ஆம். ஆண்டுதோறும் இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின் போது பல்வேறு கோவில் பணிகளுக்காக பொது நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்வது வழக்கமாக இருக்கிறது. தற்போதைய திமுக அரசாங்கம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு குறைந்தபட்சம் ரூ. 600 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### கோவில் சொத்தை ஆக்கிரமிப்பவர்கள் யார்?

கோவில் சொத்துக்களை முறைகேடாக ஆக்கிரமிப்பவர்கள் பலர் இருக்கக்கூடும். இருக்கிறார்கள் என்பதும் உண்மை. ஆனால், பாஜகவினர் ஆன்மீகத்தில் நம்பிக்கையுள்ளவர்கள்; அவர்கள் கோவில் சொத்தை திருட மாட்டார்கள் என்பது போன்ற பிரச்சாரத்தையும், அதனால் அந்த சொத்துக்களை அவர்களைப் போன்ற ஆன்மீகவாதிகளிடம் கொடுக்க வேண்டுமென்றும் பேசித் திரிகிறார்கள். ஆனால், சிவன் சொத்து குல நாசம் என்று பேசிக் கொண்டே எல்லா கடவுள்களின் சொத்துக்களையும் திருடுகிற வேலையை பாஜகவின் நிர்வாகிகள் பலர் செய்து கொண்டிருக்கிறார்கள். அரசு ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது என்று சொல்வதே தாங்கள் ஆக்கிரமித்ததை அரசு வெளியேற்றி விட்டதே என்கிற ஆத்திரத்தில் இருந்து தான். சமீப காலமாக திமுக அரசாங்கம் வந்த பிறகு பல்வேறு நபர்களிடமிருந்து அவர்கள் ஆக்கிரமித்து வைத்திருந்த நிலங்கள் மற்றும் கட்டிடங்களை நீதிமன்ற துணையோடும், நேரடியாகவும் மீட்டெடுத்திருக்கிறது. (பட்டியல் 2 அடுத்த இதழில்....) பாஜக, விஸ்வ இந்து பரிஷத், இந்து மகா சபா, சேவா பாரதி உள்ளிட்ட சங்பரிவார் ஆக்கிரமித்து வைத்திருந்து மீட்கப்பட்ட நிலங்கள் இவை.

இன்னும் பல இடங்களில் சங்பரிவார் ஆக்கிரமித்து வைத்திருக்கும் நிலங்கள் ஏராளம். உதாரணமாக, கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு பகவதி அம்மன் கோவிலுக்கு சொந்தமான ஒரு இடத்தை ஹைந்தவ சேவா சங்கம் என்கிற அமைப்பு தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. தமிழ்நாடு முழுவ தும் இப்படி தேடினால் ஆக்கிரமித்த கோவில் சொத்துக்களை காப்பாற்றிக் கொள்வதற்காக சங்பரிவார் அமைப்புகளை சேர்ந்தவர்கள் பட்டியலும், சங்பரிவார் அமைப்புகளில் ஏதாவது ஒன்றில் இருந்துகொண்டு ஆன்மீகப் போர்வையில் கோவில் சொத்துக்களை கபளீகரம் செய்தவர்கள் பட்டியலும் மிக நீண்டதாக இருக்கும். (பட்டியல் 2) இதையெல்லாம் ஏப்பம் விடும் அளவிற்கு இன்னொன்றும் நிகழ்ந்தது. 2021ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடத்தில் கட்டப்பட்டு வரும் ராமர் கோவிலுக்காக ஒரு இடம் அந்த டிரஸ்ட்டால் ரூ.18.5 கோடிக்கு வாங்கப்படு கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் அந்த நிலம் அதற்கு சில மணி நேரத்திற்கு முன்பு தான் ரூ.18.5 கோடிக்கு விற்ற நபரால் ரூ.2 கோடிக்கு வாங்கப்பட்டி ருந்தது. எனவே, சங்பரிவார் என்றால் தமிழ்நாடு முதல் உத்தரப்பிரதேசம் வரை ஒரே ரகம் தான். நரேந்திர மோடி முதல் வலதுசாரிகள், விமர்சகர் கள் எனப்படுபவர்கள் வரை இந்து சமய அறநிலை யத்துறை, அதன் நிதி பயன்பாடு, அதன் சொத்துக் களை ஆக்கிரமிப்பது உள்ளிட்ட பிரச்சனைகளில் முன்வைக்கும் வாதங்கள் அனைத்தும் அப்பட்டமான அவதூறு பிரச்சாரமும், தீய உள்நோக்கமும் கொண்ட குப்பைகளே தவிர வேறு எதுவும் இல்லை.

### தனிச்சட்டம் உருவானதன் காரணம் என்ன?

உண்மையில் கோவில்களை நிர்வகிப்பதற்கான சட்டம் ஆங்கிலேயர் காலத்தில் 1817இல் கொண்டு வரப்பட்டது. பலமுறை இது திருத்தப்பட்டு 1927ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைய வாரியம் ஏற்படுத்தப்பட்டது. இதற்கெல்லாம் காரணமாக இருந்தது அப்போது அதை நிர்வகித்து வந்தவர்க ளின் முறைகேடுகளே. இந்த புகார்களின் அடிப்படை யில் 1950ஆம் ஆண்டு சட்ட ஆணையம் கோவில்களை பராமரிக்க தனிச் சட்டம் இயற்றலாம் என பரிந்துரை செய்திருக்கிறது. அதனடிப்படையில் தான் 1959ஆம் ஆண்டு தற்போது நடைமுறையில் உள்ள சட்டம் இயற்றப்பட்டது. இந்து சமய அறநிலையங்கள் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட சர்.சி.பி. ராமசாமி ஐயர் ஆணையம் 1960ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் உள்ளதைப் போல இதர மாநிலங்களிலும் இந்து சமய அறநிலையங்களை நிர்வகிக்க தனிச்சட்டங்கள் இயற்றலாம் என பரிந்துரைத்துள்ளது. எனவே, முறைகேடுகளால் தான் அரசு நிர்ணயிக்க வேண்டிய அவசியம் எழுந்தது. அரசின் கட்டுப்பாட்டைக் கைவிடு என்பது முறைகேடுகள் தங்கள் பிறப்புரிமை என்று நினைக்கும் கூட்டத்தின் கோரிக்கையே தவிர, கடவுளின் கோரிக்கையும் அல்ல, பக்தர்களின் வேண்டுதலும் அல்ல.

**நன்றி : தீக்கதிர், கனகராஜ் கட்டுரை**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : October 12, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran